https://snapfrom.com/ https://instagramvideodownloader.net/ https://instadl.app/



## மறைந்த மாமன்ற உறுப்பினர்களின் குடும்பத்தினருக்கு ரூ.3 லட்சம்



மறைந்த மாமன்ற உறுப்பினர் ஷீபா வாசு குடும்பத்தினருக்கு நிவாரணமாக நிதி ரூ.3 லட்சத்துக்கான காசோலையை வழங்கிய நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு. உடன் மேயர் ஆர்.பிரியா, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலர் சிவ் தாஸ் மீனா, மாநகராட்சி ஆணையர் ஜெ.ராதாகிருஷ்ணன், துணை மேயர் மு.மகேஷ்குமார் உள்ளிட்டோர்.

**சென்னை, மே 19:** சென்னை மாநகராட்சியில், மறைந்த மாமன்ற உறுப்பினர்கள் குடும்பத்தினருக்கு தலா ரூ.3 லட்சத்தை நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு வெள்ளிக்கிழமை வழங்கினார்.

சென்னை மாநகராட்சியில் உள்ள உறுப்பினர்கள் உயிரிழந்தால் அவர்களின் குடும்பத்துக்கு நிவாரண நிதியாக ஒரு லட்சம் வழங்கப்பட்டு வந்தது. இந்நிலையில், மாநகராட்சி நிதி நிலை அறிக்கையில் பொறுப்பில் உள்ள மாமன்ற உறுப்பினர்கள் மரணமடைந்தால் அவர்களின் குடும்பத்துக்கு ரூ.3 லட்சம் வழங்கப்படும் என மேயர் அறிவித்தார்.

இதைத் தொடர்ந்து மறைந்த காங்கிரஸ் மாமன்ற உறுப்பினர் நாஞ்சில் ஈஸ்வர பிரசாத் (165-ஆவது வார்டு), திமுக மாமன்ற உறுப்பினர் ஷீபா வாசு (122-ஆவது வார்டு) ஆகியோரின் குடும்பத்தினருக்கு தலா ரூ.3 லட்சத்தை அமைச்சர் நேரு வழங்கினார்.

இதில் மேயர் ஆர்.பிரியா, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலர் சிவ் தாஸ் மீனா, மாநகராட்சி ஆணையர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், துணை மேயர் மு.மகேஷ்குமார், மாமன்ற ஆளும் கட்சித் தலைவர் ஆர்.ராமலிங்கம், மாமன்ற செயலர் மகேஷ் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

## கோபாலபுரத்தில் புதிய குத்துச் சண்டை மைதானம்: மேயர் ஆய்வு

**சென்னை, மே 19:** கோபாலபுரம் மாநகராட்சி விளையாட்டுத் திடலில் புதிதாக அமைக்கப்படவுள்ள குத்துச்சண்டை மைதானம் குறித்து சென்னை மேயர் ஆர்.பிரியா வெள்ளிக்கிழமை ஆய்வு செய்தார்.

சென்னை மாநகராட்சி பகுதிகளில் 222 விளையாட்டுத் திடல்கள் மற்றும் பூங்காக்களை மேம்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன. கோபாலபுரத்தில் உள்ள மாநகராட்சி விளையாட்டுத் திடலை மேம்படுத்துவது குறித்து மேயர் பிரியா ஆய்வு செய்தார்.

இந்த விளையாட்டுத் திடல் 17,658 ச.மீ. பரப்பளவு கொண்டது. இதில் 6,187 ச.மீ. பரப்பளவில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலம் குத்துச்சண்டை மைதானம் அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 11,470 ச.மீ. பரப்பளவில் நடைபாதை, கழிப்பறை மற்றும் உடற்பயிற்சிக் கூடம் அமைக்கப்பட உள்ளது. பழுதடைந்த உடற்பயிற்சிக் கூடக் கட்டடத்தை உடனடியாக அப்புறப்படுத்திவிட்டு, புதிய உடற்பயிற்சிக் கூடம் அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளும்படி அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். ஆய்வின்போது, மாமன்ற உறுப்பினர் மு.ஆ. நந்தினி மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

# திரு.வி.க.பூங்கா திறந்தவெளி மேடையை பொதுமக்கள் பயன்படுத்தலாம்

### மெட்ரோ இயக்குநர்




ஷெனாய் நகர் திரு.வி.க.பூங்காவில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் திறன் வெளிப்படுத்தும் போட்டியில் வெற்றி பெற்ற பயணிகளுக்கு பரிசு வழங்கிய மெட்ரோ ரயில் நிறுவன இயக்குநர் ராஜேஷ் சதுர்வேதி.

**சென்னை, மே 19:** ஷெனாய் நகர் திரு.வி.க.பூங்கா திறந்தவெளி திரையரங்க மேடையை பொது மக்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தும் மேடையாக பயன்படுத்தலாம் என சென்னை மெட்ரோ ரயில் இயக்குநர் ராஜேஷ் சதுர்வேதி கூறினார்.

சென்னை, ஷெனாய் நகர் திரு.வி.க.பூங்காவில் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் சார்பில் நடத்தப்பட்ட தனித்திறன் வெளிப்படுத்தும் நிகழ்ச்சியில் வெற்றி பெற்ற 30 பேருக்கு பரிசுகள் வழங்கும் நிகழ்ச்சி வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மெட்ரோ ரயில் இயக்குநர் ராஜேஷ் சதுர்வேதி தலைமை தாங்கி பரிசுகளையும், 17 சிறுவர், சிறுமிகளுக்கு மார்க் மெட்ரோ சார்பில் மெட்ரோ ரயில் பயண அட்டைகளையும் வழங்கிப் பேசியதாவது: திரு.வி.க.பூங்காவின் திறந்தவெளி திரையரங்க மேடையில் இது போன்ற நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெறும். கடந்த ஓராண்டுக்கு முன்பு தொடங்கப்பட்ட இந்தப் போட்டிகளில் இதுவரை 360 நபர்களுக்கு ரூ.12 லட்சம் மதிப்பில் பரிசுகள் வழங்கப்பட்டுள்ளன.

இதுபோன்ற நிகழ்ச்சிகளில் பார்வையாளர்களாக வருகை தரும் பொதுமக்கள் தங்களுக்குள் உள்ள திறமைகளை இந்த மேடையில் வெளிப்படுத்தலாம். சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை இந்த திரு.வி.க.பூங்காவின் திறந்த வெளி திரையரங்கின் மேடையை பயன்படுத்திக் கொள்ளலாம் என்றார் அவர்.

இந்த நிகழ்ச்சியில் மார்க் மெட்ரோ இயக்குநர் வி.கே.இளங்குமணன், கூடுதல் பொது மேலாளர் எஸ்.சதீஷ்பிரபு (தொடர்வண்டி மற்றும் இயக்கம்), இணைப் பொது மேலாளர் வி.விஜயவரதன் (இயக்கம்), மேலாளர்கள் பி. லட்சுமி (வருவாய்), கே.எஸ்.அருண் (இயக்கம்) மற்றும் அல்தாப் உசேன் (இயக்கம்), துணை மேலாளர் ஏ.அருள் ராதா (இயக்கம்), மார்க் மெட்ரோ நிறுவனத்தின் பொது மேலாளர் சீனிவாசன் மற்றும் சென்னை மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள், பணியாளர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### அமைச்சர் ஆய்வு...



ஜூன் மாதம் திறக்கப்படவுள்ள கிளாம்பாக்கம் புறநகர் பேருந்து முனையத்தின் முன்னேற்பாடுப் பணிகள் குறித்து சென்னை தலைமைச் செயலகத்தில் வெள்ளிக்கிழமை இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும தலைவருமான பி.கே.சேகர்பாபு தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. உடன் நகர்ப்புற வளர்ச்சித்துறை செயலர் அபூர்வா, கூடுதல் செயலாளர் மு.விஜயலட்சுமி, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா.

## பத்தாம் வகுப்பு தேர்ச்சி: சென்னைக்கு 29-ஆவது இடம்

**சென்னை, மே 19:** பத்தாம் வகுப்பு தேர்ச்சி வீதத்தின் அடிப்படையில் சென்னை மாவட்டத்துக்கு 29-ஆவது இடம் கிடைத்துள்ளது.

சென்னை மாவட்டத்தில் 22,011 மாணவர்கள், 23,659 மாணவிகள் என மொத்தம் 45,670 பேர் தேர்வை எழுதினர்.

இதில் 13,756 மாணவர்கள், 21952 மாணவிகள் என மொத்தம் 40708 பேர் தேர்ச்சிபெற்றனர். இதன்படி 85.21 சதவீத மாணவர்களும், 92.78 சதவீத மாணவிகளும் என மொத்தம் 89.14 சதவீதம் பேர் இத்தேர்வில் தேர்ச்சி அடைந்துள்ளனர்.

### ஜூன் 4 –இல்

## மகாலிங்கபுரம் ஸ்ரீ ஐயப்பன் குருவாயூரப்பன் கோயிலில் ஆண்டு விழா

**சென்னை, மே.19:** சென்னை மகாலிங்கபுரம் ஸ்ரீ ஐயப்பன்-குருவாயூரப்பன் கோயிலில் சபரிமலை தந்திரி பிரம்மஸ்ரீ கண்டரரு மகேஷ் மோகனரு தலைமையில் 34-ஆவது ஆண்டு விழா ஜூன்4-இல் தொடங்கி 13 -ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

சபரிமலை தந்திரி பிரம்மஸ்ரீ கண்டரரு மகேஷ் மோகனரு ஜூன் 5-ஆம் தேதி கொடியேற்றி விழாவைத் தொடங்கி வைத்து 13-ஆம் தேதி வரை சிறப்பு பூஜைகளை செய்கிறார்.

இதில் ஜூன் 6 முதல் 11-ஆம் தேதி வரை உற்சவ பலி பூஜையிலும், 10-ஆம் தேதி மஹா உற்சவ பலி பூஜையிலும் பங்கேற்க விரும்புவோர் முன்பதிவு செய்துக்கொள்ளலாம்.

ஜூன் 11 -ஆம் தேதி கோயில் நிர்வாகம் சார்பில் வாத்ய வித்யாலயத்தில் பயின்ற மாணவர்களின் செண்டை மேளம் அரங்கேற்றத்தில் தலைமை விருந்தினராக நடிகரும் செண்டை மேளக் கலைஞருமான ஜெயராம், ட்ரம்ஸ் சிவமணி ஆகியோர் பங்கேற்கின்றனர். அன்று இரவு 9 மணிக்கு பள்ளி வேட்டை நடைபெறுகிறது.

தொடர்ந்து ஜூன் 12 -ஆம் தேதி குருவாயூரப்பன் ஆராட்டும், 13-ஆம் தேதி குருவாயூரப்பன் சந்தன அபிஷேகமும் நடைபெறவுள்ளது.

இது குறித்து கூடுதல் தகவல்களுக்கு 044 28171197 என்னும் தொலைபேசி எண்ணிலும், 88079 18811, 88079 18855, 94442 90707 ஆகிய கைப்பேசி எண்களிலும் தொடர்பு கொள்ளலாம் என கோயில் மேலாளர் அனிஷ் குமார் தெரிவித்துள்ளார்.


**சிட்டி சிவில் XI உதவி நீதிபதி சென்னை நீதிமன்றத்தில்**
**O.S. No. 1006/2020**

ICICI வங்கி லிமிடெட்,
அதன் பிரதிநிதியாக மேலாளர் ...வாதி
Vs.
பெறுநர்,
தப்ரேஸ் பாஷா
S/o சான் பாஷா,
கதவு எண் 221/117, ஆஞ்சநேயர் கோயில் தெரு, கடம்பூர் கிராமம்,
உமராபாத் அஞ்சல், ஆம்பூர்,
கடம்பூர் மசூதி எதிரில், வேலூர்-635801.
...பிரதிவாதி

**அறிவிப்பு**

இந்த மாண்புமிகு சிட்டி சிவில் XI உதவி நீதிமன்றம், சென்னை முன்னிலையில் மேற்படி O.S. No. 1006/2020 சிவில் வழக்கு, பணத்தை வசூலிப்பதற்காக உங்களுக்கு எதிராக வாதி தாக்கல் செய்துள்ளார். நீங்கள் ஆஜராவதற்காக மேலே உள்ள வழக்கு 05.07.2023 அன்று விசாரணைக்கு வருகிறது. மேலும் அன்றைய தினம் காலை 10.30 மணிக்கு நீங்கள் ஆஜராகி உங்கள் ஆட்சேபணையை நேரிலோ அல்லது உங்கள் வழக்கறிஞர் மூலமாகவோ தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. அன்றைய தினம் நீங்கள் ஆஜராகத் தவறினால் மேற்கண்ட விவகாரம் நீங்கள் இல்லாத நிலையிலும் முடிவு செய்யப்படும்.

நீதிமன்ற உத்தரவின்படி
H.சேகரன்
வழக்கறிஞர்

**சிட்டி சிவில் XVIII உதவி நீதிபதி சென்னை நீதிமன்றத்தில்**
**O.S no.9112 / 2021**

ICICI வங்கி லிமிடெட்,
அதன் பிரதிநிதியாக மேலாளர் ...வாதி
Vs.
பெறுநர்
H அஃமீனா பேகம்
D/O . முகமது ஹனீஃப்
கதவு எண்.10/18, 2வது தளம், 3வது தெரு, பென்ஷனர்ஸ் லேன், பழைய வண்ணாரப்பேட்டை, ராயபுரம், LM: Nr H1 காவல் நிலையம், சென்னை-600021.
...பிரதிவாதி

**அறிவிப்பு**

இந்த மாண்புமிகு சிட்டி சிவில் XVIII உதவி நீதிமன்றம், சென்னை முன்னிலையில் மேற்படி O.S no.9112 / 2021 சிவில் வழக்கு பணத்தை வசூலிப்பதற்காக உங்களுக்கு எதிராக வாதி தாக்கல் செய்துள்ளார். நீங்கள் ஆஜராவதற்காக மேலே உள்ள வழக்கு 05.06.2023 அன்று விசாரணைக்கு வருகிறது. மேலும் அன்றைய தினம் காலை 10.30 மணிக்கு நீங்கள் ஆஜராகி உங்கள் ஆட்சேபணையை நேரிலோ அல்லது உங்கள் வழக்கறிஞர் மூலமாகவோ தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. அன்றைய தினம் நீங்கள் ஆஜராகத் தவறினால் மேற்கண்ட விவகாரம் நீங்கள் இல்லாத நிலையிலும் முடிவு செய்யப்படும்.

நீதிமன்ற உத்தரவின்படி
H.சேகரன்
வழக்கறிஞர்

**PUBLIC NOTICE**

It is hereby informed to the General Public at large that our client, Noombal Gardenia, a partnership firm is the absolute owner of the property being land of total extent of 7 acres 54.5 cents, comprised in Survey No. 19/1, 19/2, 15/6, 15/4A, 15/4B and 120/1, situate at Puliambedu & Noombal Villages, presently Poonamallee Taluk, Tiruvallur District.

After securing necessary approvals for the development, our client deals with and conveys the plots which are developed over the said property, named as "Elephantine Noombal Gardenia".

In the above circumstances, we found that a public caution notice was issued by Asset Reconstruction Company (India) Limited (ARCIL), on 10.05.2023 in The New Indian Express and Dinamani news paper, relating to the said property among others.

We hereby inform that the claims made by ARCIL relating to the said property disputing the rights and title of our client is unsustainable. The rights and title of Noombal Gardenia over the said property as acquired vide a sale deed dated 21.12.2021, registered as document number 23777/2021 stands valid and confirmed by the order passed by Honourable Madras High Court in C.A. No. 410 and 411/2022 in C.A. No. 122/2019 in C.P. 502/2015.

Sd/-
**Ganesh & Ganesh**
**Attorneys & Solicitors**
New No.29, Muthupandian Avenue, Santhome High Road, Mylapore, Chennai - 600004.
Phone: 9940421509 Email: firmatlaw1@gmail.com

**இந்தியன் ஓவர்சீஸ் வங்கி**
ரீடெய்ல் மார்ட், அடையார்: 12, சர்தார் பட்டேல் சாலை, அடையார், சென்னை - 600020 Tel No: 044-2442 5585, E-mail: 0002retailmart@iob.in

**அசையா சொத்துக்களின் விற்பனை அறிவிப்பு**

**கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதிச்சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002-ன் விதி 8(6) உடன் கீழ், அசையா சொத்துக்களின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.**

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, ரீடெய்ல் மார்ட், அடையார் கிளையின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், மேற்படி வங்கிக்கு **கடன்தாரர்/அடமானதாரர்: Mr.சுபாஷ் குமாரன்,** S/o.Mr.குமாரன் சுப்ரமணியன், 19/41, பிரிக்லின் ரோடு, 2வது சந்து, ஓட்டேரி, பெரம்பூர் பேரக்ஸ், சென்னை-600012 என்பவரிடமிருந்து பெறவேண்டிய கடன் தொகையான **18.05.2023** அன்றுள்ளபடி ரூ.**42,95,015.70** (ரூபாய் நாற்பத்து இரண்டு லட்சத்து தொண்ணூற்று ஐந்தாயிரத்து பதினைந்து மற்றும் பைசா எழுபது மட்டும்)ஐ வசூலிக்கும் பொருட்டு, கடன் வழங்கிய வங்கியிடம் பிணையப்படுத்தப்பட்ட / அடுவைக்கப்பட்ட ஆக்கப்பூர்வ சுவாதீனம் செய்து கொண்ட கீழ்கண்ட அசையாச் சொத்தினை **23.06.2023** அன்று **விற்பனை செய்யவுள்ளார்** என்பதை குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரியப்படுத்துகிறது. இந்த சொத்து **"உள்ள இடத்தில் உள்ளவாறு" "உள்ளது உள்ளவாறு" மற்றும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே"** விற்கப்படும்.

**அசையா சொத்தின் விவரம்**

வட சென்னை பதிவு மாவட்டம், கொன்னூர் சார்-பதிவு மாவட்டம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட, சர்வே எண்.55/2, பட்டா படி பழைய சர்வே எண்.55/2 பகுதி, T.S.எண்.38/2, வார்டு D, ப்ளாக் எண்.5, பட்டரவாக்கம் கிராமம், அம்பத்தூர் தாலுகா, சென்னை மாவட்டம் **ஃப்ளாட் எண்.F-2, முதல் தளம், மனை எண்.11, மகாத்மா காந்தி ரோடு, (முன்னர் ஃபாத்திமா தெரு), ஞானமூர்த்தி நகர் விரிவு, பட்டரவாக்கம், சென்னை-600053** என்னும் முகவரியில் **836 சதுர அடி குடியிருப்பு ஃப்ளாட்** பொது இடம் உட்பட, **மொத்தமுள்ள 1857 சதுர அடி நிலத்தில் 436 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு நிலம் அதனுடன் மூடிய கார் பார்க்கிங்** மற்றும் அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: மனை எண்.12, தெற்கு: மனை எண்.10, கிழக்கு: 20 அடி அகல பொது ரோடு, மேற்கு: சர்வே எண்.55/1.

**குறைந்தபட்ச கேட்பு விலை: ₹ 41,95,000/-; டெபாசிட்தொகை: ₹ 4,19,500/-**
ஏல உயர்வுத்தொகை: ₹ **50,000/-**

**இ-ஏல தேதி மற்றும் நேரம்: 23.06.2023 காலை 11.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை**
**https://www.mstcecommerce.com/auctionhome/ ibapi**
என்ற இணையத்தளத்தில் நடைபெறும். விற்பனை முடியும் வரை தலா 10 நிமிடங்கள் கொண்ட நீட்டிப்புகள் அனுமதிக்கப்படும்

**சொத்தினை பார்வையிடுதல் : 22.06.2023 அன்று காலை 10.00 மணி-மாலை 5.00 மணிக்குள்**

| | |
|---|---|
| விலைக்குறிப்பீடு படிவத்தினை EMD உடன் ஆன்லைனில் சமர்பிக்கும் தேதி : **22.05.2023** முதல் | விலைக்குறிப்பீடு படிவத்தினை EMD உடன் ஆன்லைனில் சமர்பிக்க கடைசி தேதி: **22.06.2023 - 5.00 p.m.** |

தொடர்புகொள்ள வேண்டிய நபர் : Mr.Chandrasekhar Mahadeoji, முதன்மை மேலாளர், Mob: 84460 12426

விரிவான ஏல விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, சேவை வழங்குனர் இணைத்தளமான **https://www.mstcecommerce.com/auctionhome/ibapi** அல்லது வங்கியின் இணையத்தளமான **www.iob.in** பார்க்கவும்.

இடம் : சென்னை
தேதி : 18.05.2023
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
இந்தியன் ஓவர்சீஸ் வங்கி

கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாதமளித்தவர்கள் ஆகியோர்களுக்கு சம்மந்தப்பட்ட கடனிற்கான மேற்குறித்த தேதியில் நடைபெறும் இ-ஏலம் குறித்த 2002 பிணைய நலன் (அமலாக்கம்) விதிகளின் விதி 8(6) மற்றும் விதி 9(1)ன் கீழான அறிவிப்பும் இதுவேயாகும்.

**इंडियन बैंक இந்தியன் வங்கி**
इलाहाबाद அலகாபாத்

**வளசரவாக்கம் கிளை**
118-119, இந்திரா நகர், ஆற்காடு ரோடு, வளசரவாக்கம், சென்னை - 600 087. போன் : 044-24866470 / 9470. இமெயில் : valasaravakkam@indianbank.co.in

**கோரிக்கை அறிவிப்பு வெளியீடு**

**2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டப்பிரிவு 13(2)-ன் கீழ் அறிவிப்பு 09.05.2023 அன்று ஒப்புகையுடன் கூடிய பதிவுத்தபால் மூலம் அனுப்பப்பட்டது.**

**பெறுநர். (1) M/s. அஜந்தா டைல் ஹவுஸ், (கடன்தாரர்), உரிமையாளர்/ அடமானதாரர் : திரு. T R ஸ்ரீகாந்த்,** கதவு எண்.182, AGS டவர்ஸ், பூந்தமல்லி ஹை ரோடு, வேலப்பஞ்சாவடி, சென்னை - 600 077. **(2) Ms. T R தனலட்சுமி, (ஜாமீன்தாரர்),** ஃபிளாட் எண்.F-1, ஹரிணி ஃபிளாட்ஸ், கதவு எண்.5/7, Iவது தெரு, அருணாச்சலம் நகர், காரம்பாக்கம், போரூர், சென்னை - 600 116.

**பொருள் : இந்தியன் வங்கி, வளசரவாக்கம் கிளையில் உள்ள தங்கள் OCC கடன் கணக்கு எண்.722935343- சம்பந்தமாக.**

நீங்கள் பெற்ற கடனுக்காக **08.05.2023** வரை செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையான **ரூ.25,46,436/- (ரூபாய் இருபத்து ஐந்து லட்சத்து நாற்பத்து ஆறாயிரத்து நானூற்று முப்பத்து ஆறு மட்டும்)** இதில் மேலும் 08.05.2023 முதல் திரும்ப செலுத்தும் தேதி வரை ஒத்துக்கொண்ட மேலதிக வட்டியுடன் சேர்த்து செலுத்த தவறிவிட்டீர்கள்.

**08.05.2023** அன்று வரை செலுத்த வேண்டிய தொகையான **ரூ.25,46,436/- (ரூபாய் இருபத்து ஐந்து லட்சத்து நாற்பத்து ஆறாயிரத்து நானூற்று முப்பத்து ஆறு மட்டும்)** திரும்ப செலுத்துமாறு **08.05.2023** தேதியிட்ட மேற்குறிப்பிட்ட SARFAESI சட்டத்தின் கீழ் அறிவிப்பை பதிவுத்தபால் மூலம் வங்கி அனுப்பியது. பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட்ட அறிவிப்பு திரும்பி வந்துவிட்டது.

நீங்கள் செலுத்த வேண்டிய கடன் தொகையான **ரூ.25,46,436/-** மேலும் 08.05.2023 முதல் மேலதிக வட்டியையும் சேர்த்து கோரிக்கை அறிவிப்பு வெளியான 60 நாட்களுக்குள் செலுத்த வேண்டும். அவ்வாறு தவறும் பட்சத்தில், பிணைவைப்புச் சட்ட அமலாக்கத்தை கீழ்கண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்ட ஈடுபெற்ற ஆஸ்தியை சுவாதீனப்படுத்தும். வங்கிக்கு உள்ள பிற பரிகார வழிமுறைக்கு பாதகமின்றி இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது.

**"SARFAESI சட்டம் பிரிவு 13(8) ஷரத்துகளின் கீழ் அமைக்கப்பட்ட விதிகளின்படி சொத்துக்களை மீட்டுக்கொள்ள உங்களுக்கு உள்ள உரிமையை கவனத்தில் கொள்ளவும்".**

**அட்டவணை**

பிணையமாக அளிக்கப்பட்டுள்ள அடமான சொத்தின் முக்கிய விபரங்கள் பின்வருமாறு :

**அடமான சொத்து :** ஃபிளாட் எண்.F-1, ஹரிணி ஃபிளாட்ஸ், கதவு எண்.5/7, Iவது தெரு, அருணாச்சலம் நகர், காரம்பாக்கம் கிராமம், சென்னை - 600 116-ல் உள்ள நிலம் மற்றும் கட்டிடத்தின் அனைத்து துண்டுகளும் பகுதிகளும், சர்வே எண்.24/4A, பட்டா எண்.2254, பட்டாவின்படி புதிய சர்வே எண்.24/4A1B-ல் அடங்கியுள்ளது. காரம்பாக்கம் கிராமம், அம்பத்தூர் தாலுகா, திருவள்ளூர் மாவட்டத்தில் 2232 சதுர அடியிலிருந்து 565 சதுர அடி UDS கொண்டு உள்ளது. மொத்த கட்டிட பரப்பளவு 1175 சதுர அடி, சென்னை தெற்கு பதிவு மாவட்டம் மற்றும் SRO இணை-1 சைதாப்பேட்டை சென்னையில் அமைந்துள்ளது. எல்லைகள் - கிழக்கில் : ராஜாமணியம்மாள் அவர்களுக்கு சொந்தமான நிலம், மேற்கில் : சுலோச்சனா அவர்களுக்கு சொந்தமான நிலம், வடக்கில் : ரோடு, தெற்கில் : சர்வே எண்.26-ல் உள்ள பூங்கா.

தேதி : 20.05.2023
இடம் : சென்னை
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
இந்தியன் வங்கி.

**refex**

**ரீஃபெக்ஸ் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்**
பதிவு அலுவலகம்: தரைத்தளம், பாஸ்கான் ஃபியூச்சுரா, புதிய எண்: 10/2, வெங்கடநாராயணா சாலை, தியாகராயா நகர், சென்னை - 600017
தொலைபேசி: +91-44-4340 5900 | இணையதளம்: www.refex.co.in
CIN: L45200TN2002PLC049601

REFRIGERANT GASES | POWER TRADING | ASH & COAL HANDLING

2023 மார்ச் 31 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் முழு ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட நிதிசார் முடிவுகளின் சுருக்கம் [₹ லட்சத்தில்]

| வ.எண் | விவரங்கள் | தனித்து நிற்கும் | | | | | தொகுக்கப்பட்ட | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | முடிவடைந்த காலாண்டு | | | முடிவடைந்த ஆண்டு | | முடிவடைந்த காலாண்டு | முடிவடைந்த ஆண்டு |
| | | மார்ச் 31, 2023 (தணிக்கை செய்யப்பட்டது) | டிசம்பர் 31, 2022 (தணிக்கை செய்யப்படாதது) | மார்ச் 31, 2022 (தணிக்கை செய்யப்பட்டது) | மார்ச் 31, 2023 (தணிக்கை செய்யப்பட்டது) | மார்ச் 31, 2022 (தணிக்கை செய்யப்பட்டது) | மார்ச் 31, 2023 (தணிக்கை செய்யப்பட்டது) | மார்ச் 31, 2023 (தணிக்கை செய்யப்பட்டது) |
| 1 | இயக்க செயல்பாடுகளிலிருந்து மொத்த வருவாய் | 63,197.26 | 38,177.08 | 17,811.12 | 1,63,743.74 | 44,898.48 | 63,197.26 | 1,63,743.74 |
| 2 | விதிவிலக்கான மற்றும் அசாதாரண உருப்படிகள் மற்றும் வரிகளுக்கு முந்தைய லாபம் / (இழப்பு) | 6,763.41 | 3,546.24 | 1,868.67 | 15,663.62 | 4,760.33 | 6,763.13 | 15,663.35 |
| 3 | விதிவிலக்கான மற்றும் அசாதாரண உருப்படிகள் மற்றும் வரிகளுக்கு முந்தைய லாபம் / (இழப்பு) | 6,789.93 | 3,555.02 | 3,206.28 | 15,638.89 | 6,097.94 | 6,789.65 | 15,638.62 |
| 4 | விதிவிலக்கான மற்றும் அசாதாரண உருப்படிகள் மற்றும் வரிகளுக்கு முந்தைய லாபம் / (இழப்பு) | 5,067.26 | 2,615.34 | 2,401.03 | 11,606.35 | 4,538.99 | 5,066.98 | 11,606.08 |
| 5 | செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் (ஒவ்வொன்றும் ரூ.10/- என்ற முகமதிப்பை கொண்டது. | 2,210.70 | 2,210.70 | 2,100.20 | 2,210.70 | 2,100.20 | 2,210.70 | 2,210.70 |
| 6 | கையிருப்புத் தொகை (மறுமதிப்பீடு கையிருப்புத் தொகையைத் தவிர்த்து) | NA | NA | NA | 29,228.95 | 16,296.03 | NA | 29,228.68 |
| 7 | ஒரு பங்கிற்கான அடிப்படை வருவாய் | 22.92 | 11.87 | 11.43 | 53.90 | 21.61 | 22.92 | 53.89 |
| 8 | ஒரு பங்கிற்கு நீர்த்த வருவாய் | 22.88 | 11.85 | 11.43 | 53.84 | 21.61 | 22.88 | 53.84 |

**குறிப்புகள்:**

1. SEBI (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 33-ன் கீழ் பங்குச்சந்தையில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் 2023 மார்ச் 31 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் முழு ஆண்டிற்கான நிதிசார் முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. நிதிசார் முடிவுகளின் முழு வடிவ அறிக்கை பங்குச்சந்தை இணையதளம் [www.bseindia.com & www.nseindia.com] மற்றும் நிறுவனத்தின் இணையதளம் [www.refex.co.in]-ல் உள்ளது.
2. நிறுவனங்கள் சட்டம் 2013, பிரிவு 133-ன் கீழ், அறிவிக்கை செய்யப்பட்ட இந்திய கணக்கியல் தரநிலைகளின்படி (INDAS) நிறுவனத்தின் நிதிசார் முடிவுகள் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது.
3. ஒப்பீடு நோக்கிற்காக தேவைப்படும் இடங்களில் எண்கள் மறுவகையாக்கம் / மறுகுழுவாக்கம் செய்யப்பட்டிருக்கின்றன.
4. மேற்கண்ட தணிக்கை செய்யப்பட்ட நிதிசார் முடிவுகளின் அறிக்கை, தணிக்கை குழுவால் மீளாய்வு செய்யப்பட்டு, 18 மே, 2023 அன்று நடைபெற்ற கூட்டத்தில் இயக்குனர் குழுவால் ஒப்புதல் அளிக்கப்பட்டது.




ரீஃபெக்ஸ் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் நிறுவனத்திற்காக இயக்குனர் குழுவின் ஆணையின்படி
அனில் ஜெயின்
நிர்வாக இயக்குனர்
DIN: 00181960

இடம்: சென்னை
தேதி: மே 18, 2023

www.refex.co.in | Refex-Group | refex-group | @GroupRefex | refexgroup

ஞாயிற்றுக்கிழமைதோறும் **தினமணி கதிர்** இளமை! புதுமை! இனிமை!




For More ePaper Please Bookmark This Site: https://www.fresherwave.in/